விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(வெள்ளி விழா ஆண்டு 1983)

மலர் 35 மார்கழி 2 ரபி. அவ் 11 இதழ் 305
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17 12 83

தமிழர் பிரச்னை: பூர்வாங்க மாநாடு

## தமிழ் காங்கிரஸ் கலந்துகொள்ளும்

(கொழும்பு)

தமிழர் பிரச்னை தொடர்பான பூர்வாங்க மகாநாட்டில் தமிழ்க்காங்கிரஸ் கலந்துகொள்ளும்' தமிழ்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்று மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

21ம் தேதி கூட்டம் ஒன்று கூட்டப்படுவதாகவே அழைப்பு கிடைத்திருப்பதாகவும், சர்வ கட்சி மாநாடு என்று அதில் தெரிவிக்கப்பட வில்லையென்றும் அவர் நேற்று 'ஈழநாடு'விடம் தெரிவித்தார்.

21ம் தேதி நடக்கவிருக்கும் கூட்டத்திற்கு சுகவீனம் காரணமாக தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எஸ் ஆர். கனகநாயகம் கலந்துகொள்ள மாட்டாரென்றும், அவரின் பணிப்பின்பேரில், பொதுச் செயலாளரான தாமும், உப தலைவரான திரு. எம். மோதிலால் நேருவும், உபசெயலாளரான திரு ரி. மகேந்திரராசாவும் கலந்துகொள்வார்களென்றும், இதுபற்றி ஜனதிபதிக்கு அறிவித்திருப்பதாகவும் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

## கூட்டணி நிலைமை

தமிழர் பிரச்னை தொடர்பான பூர்வாங்க மாநாட்டிற்கான அழைப்பு நேற்று மாலை வரை கிடைக்கவில்லை என்று தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் கோப்பாய் எம். பி. யுமான திரு. மு. ஆலாலசுந்தரம் தெரிவித்தார்.

இன்று சனிக்கிழமையும், நாளை மறுநாள் திங்கட்கிழமையும் பொதுவிடுமுறை தினமாதலால், தபால் விநியோகம் நடைபெறமாட்டாது. இனிமேல் அழைப்புக் கிடைக்குமானல் 20-ம் திகதி செவ்வாய்க்கிழமை தமிழரசுக் கட்சிக்குக் கிடைக்கக்கூடும். அழைப்புக் கிடைத்தபின்னரே அதுபற்றி முடிவுசெய்யப்படும் என்று திரு. மு. ஆலாலசுந்தரம் நேற்றுமாலை தெரிவித்தார். (கு)

### கலைஞர் கருணாநிதி அனுப்பிவைத்த ஒரு கோடி தமிழக மக்கள் கையெழுத்து மகஜர்

# இலங்கை தமிழர்பிரச்னை ஐ. நா. ஆலோசிக்கும்!

(சென்னை)

**இலங்கைத் தமிழர் பிரச்னையில், தலையிடவேண்டுமெனக்கோரி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பி வைத்த ஒரு கோடி தமிழக மக்களின் மகஜர் குறித்து ஐ. நா. மனித உரிமைக்குழு ஆலோசிக்கவுள்ளது.**

இந்தத் தகவல் இந்திய அரசுக்குக் கிடைத்துள்ளதாக, நேற்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி வி நரசிம்மராவ் லோகசபையில் வெளியிட்டார்.

கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், இந்த விபரத்தைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில், ஐ. நா தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்ட மகஜருக்கு, ஐ. நா தலைமையகம் மதிப்பளித்து. மனித உரிமைகள் குழுவில், இது பற்றி ஆலோசிக்கப்படவுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாக வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. சபையில் இலங்கைத் தமிழர் பிரச்னையை உணரக்கூடிய வகையில், ஐ. நா. மகஜர் தயாரிக்கப்பட்டதாகக் கலைஞர் கருணாநிதி தெரிவித்திருந்தார்.

இலங்கையில் நடந்த சம்பவங்களை நேரில் கண்டவர்களின் அறிக்கைகளையும் இம் மகஜரில் சேர்க்கப்பட்டிருந்தது.

ஒருகோடி தமிழக மக்கள் கையெழுத்திட்ட இந்தப் பாரங்களில், ஐயாயிரம் பேர் இரத்தத்தால் கையெழுத்திட்டது குறிப்பிடத்தக்கது.

பார்சல்களாக விமானத்தில் பெரும் பணச்செலவில் ஐ நா. சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## நாளை யாழ். நகரில் உப தபாலதிபர்கள் சங்க மாநாடு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ் பேசும் உப-தபால் அதிபர்களின் தொழிற்சங்க 21-வது வருடாந்த கூட்டம் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை காலை தலைவர் திரு ஐ. நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

உப-தபாலதிபர்கள் ஐக்கிய முன்னணியின் ஓய்வூதியத் திட்டத்தை அங்கீகரித்தல், கலவரங்களினல் பாதிக்கப்பட்ட அரசு கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தகுந்த நிவாரணமும், பாதுகாப்பும் வழங்க வேண்டும், கொள்கைய

[8-ம் பக்கம் பார்க்க]

# யாழ். நவீனசந்தை 3ம்கட்டம்: ரூபா 20 லட்சம் ஒதுக்கீடு

## வீதி வேலைகளுக்கு ரூபா 50 லட்சம்

(கா. யோகநாதன்)

யாழ்ப்பாணம் நவீன சந்தை மூன்றும் கட்ட வேலைக்கு யாழ். மாநகரசபை 1984-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 20 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

வீதி வேலைகளுக்கு 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டம் நேற்றுமுதல் யாழ், மாநகர சபையில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது

1984 ம் ஆண்டு பொதுப் பகுதி மொத்த வருமானம் ரூ 2, 6 7?, 670 செலவினம் ரூ 2,46 26,650 மேலதிகம் ரூ 46,020 ரூபாவாகும்

மின்சாரப் பகுதி மொத்த வருமானம் ரூ. 3,22 85,000 ரூபாவாகும். செலவினம் ரூ. 3,22,70,850. மேலதிகம் ரூ. 14,150 ரூபாவாகும்.

யாழ். பஸ் நிலையத்தில் முன்பு மலசலகூடமிருந்த இடத்தில் பஸ் பிரயாணிகளுக்கான நவீன மலசலகூடம் அமைப்பதற்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இவ் வேலைகள் ஆரம்பமாகி விட்டது.

'யூனிசெவ் ஐந்தாண்டுத் திட்டத்தின் அபிவிருத்திவேலைகளுக்கென 84-ம் ஆண்டு ஆரம்ப வேலைகளுக்கு 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

மின்சாரம் மாலை 5 மணி முதல் இரவு 10 மணிவரை சில பகுதிகளில் வெளிச்சம் குறைவாக எரிவதை நிவர்த்தி செய்து நல்ல வெளிச்சம் கொடுப்பதற்காக மெல்லிய மின்வயர்களை மொத்த வயர்களாக மாற்றுவதற்கும் மற்றும் மின்சார வேலைகளுக்கும் உப மின் நிலையங்கள் அமைப்பதற்கும் 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது- இது 50 லட்சம் ரூபா கடன் திட்டத்திற்குள் அமையும்.

மின்சார கேபிள் வயர் உற்பத்திச் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு அடையாள மான்யமாக 1000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

பலமான தூண்களை வியாபார நோக்குடன் அமைத்து யாழ் குடாநாடு முழுவதும் விநியோகிக்கும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்குப் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

நல்லூர் கல்யாண மண்டபத்தை 'இந்து லாட்ஜா'க மாற்றும் திட்டத்தின்கீழ் அறைகள் கட்டுவதற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

குப்பைகள் அகற்றுவதற்கு 2 டிரக்டரும், மேல் மூடிகளுடன் 3 பெட்டிகளும் வாங்குவதற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதிகளும், வடிகால்களும் பராமரிப்பு, திருத்த வேலைகளுக்கு 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வீதி வேலைகளின் பாவிப்புக்கு 1 டிராக்டர் வாங்க 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் புதிதாக மக்கள் பாவனைக்கும் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைப்பதற்கும் கடைப்பகுதிகளை விஸ்தரிப்பதற்கும் இரு புதிய வீதிகள் திறக்கப்படவிருக்கிறது.

மானிப்பாய், ஆஸ்பத்திரி வீதிகளை இணைக்கும் கோணர் தோட்ட வீதியை சுவீகரித்து வீதி அமைப்பதற்கு 3 லட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரி வீதியையும், பண்ணைப் பகுதியையும் இணைக்கும் வீதியை அமைக்க யாழ். ப. நோ கூ. சங்கக் காணியைச் சுவீகரித்து வீதி அமைப்பதற்கு 9 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ். துரையப்பா விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதற்கு ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

இந்த வரவு செலவுத் திட்டத்தை யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், சபை அதிகாரிகள் உத்தியோகத்தரின் உதவியுடன் தயாரித்துள்ளார். (க)

# வயோதிப மாது கோரக் கொலை!

## மண்டைதீவில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டில் தனிமையில் இருந்த வயோதிபமாது கோரமாக குரல்வளை நெரித்துக் கொலை செய்யப்பட்டு, அவரது நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன

இவ்வயோதிப மாதின் சடலம் அழுகியநிலையில் நேற்று முன் தினம் உறவினரால் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பரிதாப சம்பவம் மண்டைதீவில் நடைபெற்றுள்ளது.

வி. அமுதவல்லி அல்லது சங்குவதி (60 வயது) என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார். இவர் அணிந்திருந்த தோடுகள், மூக்குத்தி உட்பட வீட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த மூன்று மோதிரங்கள், பதக்கம் ஆகியனவும் 'டேப் றெக்கோடர்' ஒன்றும்கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் கணவர் விநாயகமூர்த்தி (70 வயது) புதல்வர்கள் சிவசுப்பிரமணியம், சித்திவிநாயகம் ஆகியோர் கரியாலை நாகபடுவான், வவுனியா பெரியதம்பனை ஆகிய இடங்களில் விவசாயம்செய்து வருவதாகவும், இறந்தவர் தனிமையில் வீட்டில் வசித்து வந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது, இவர் கடைசியாக கடந்த 12ம் திகதி வீட்டுக்கு அண்மையிலுள்ள திலகவதி நல்லையா என்பவரின் கடையில் பொருட்கள் வாங்கிச் சென்றபின்னர் வெளியில் நடமாடவில்லையாம். அன்று தொடக்கம் வீடு பூட்டிய படியே கிடந்ததாகவும் நேற்று முன்தினம் அவ்வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்ததால் சந்தேகமுற்ற உறவினரான நாகலிங்கம் சிவகுரு

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திறமை மிக்கதும் முற்போக்குமான வீட்டுத்தலைவிகள் எப்பொழுதும் உபயோகிப்பது Sakvra air Freshner (சக்குரு வளி பரிசுத்தி) இவை படுக்கை அறைகள், குளியல் அறைகள், மலசல கூடங்கள், களஞ்சிய அறைகள். மற்றும் வாகனங்கள் போன்றவற்றை நறுமணத்துடன் திகழ வைக்கின்றன இது மட்டுமல்ல 'சக்குரு' ஒரு உகந்த "பூச்சி விரோதி" உங்கள் அலுமாரிகளிலுள்ள புடவைகளைப் பூச்சிகளிலிருந்து பாதுகாத்து நறுமணத்துடன் வைத்திருக்கும். இப்பொழுது யாழ்ப்பாணத்தில் எங்கும் கிடைக்கும். Whitefield Industries, Vallai Road. Chankanai 10569

ஒருநாள் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. விமாகி, 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 24043 (10585)

சாவகச்சேரி நுணுவில் கண்டி வீதியில் 190ம் கட்டையடியில் இரு மின்தறி நிலையங்களின் மத்தியில் 34/3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் சதானந்தன், சதாகிறீம் கவுஸ், கோட்டடி முன்பாக, சாவகச்சேரி, அல்லது செல்வம், செல்வம் கூல்பார் நவீன சந்தை, சாவகச்சேரி. 10587

1 1/2 மாத வயதுடைய நல்ல வளர்ப்பிலுள்ள நல்லின பேட்டுக் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. க. நிரஞ்சன் அரசடி லேன், திருநெல்வேலி. 10584

Land Master (கையால் உழுவது) இரண்டு சக்கர உழவு யந்திரம் மிகவும் நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. விலை ரூ. 6000/- தொடர்பு: 65, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி. 10580

இருபது ஏக்கர் திருத்திய காணி பாரிய கிணற்றுடனும், நாற்பது ஏக்கர் திருத்தப்படாத காணியும். வவுனியா மாவட்டத்தில் உடனடியாக விற்பனைக்குண்டு. உறுதியும் வரைபடங்களும் உண்டு. மேல் விபரங்களுக்கு, ரஞ்சன் 11, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணம். 10566

யாழ். மணிக்கூட்டு வீதி, B. M. C.க்கு முன்பாக (ஒழுங்கைக்குள்) வீடுகட்ட அல்லது களஞ்சியம் அமைக்கக்கூடிய 1 பரப்பு 3 குளிக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசெஸ் 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம், 10597

நல்ல நிலைமையிலுள்ள E. L Vauxhall Wyvern கார் விற்பனைக்குண்டு 15 சோனுவலை லேன் கொக்குவில், கிழக்கு. தொலைபேசி: 23796 (10589)

நெல்லியடி, சந்தைக்கு அருகாமையில் கரவெட்டி மேற்கில், வெற்றியா வளவு என்னும் மூன்று பரப்புக் காணியும் மூன்று அறையுடன் கூடிய வீடு, கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- செல்வராசா, சித்தாப் பத்தனை, வல்வெட்டி. 10542

## விற்பனைக்கு

கிளிநொச்சி பழைய பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இரண்டு கடைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சா. செல்வரட்ணம், D/4, கிளிநொச்சி, அல்லது- 133, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். 10547

பண்டத்தரிப்பு நகர் 'கீரிமலை றோட்டில் 3 பரப்பு வீட்டுக் காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: 15/7, கிளிபட் றோட் (Clifford Road), கொழும்பு - 3. 10540

## தேவை

கல்விபண்பு நிறைந்த இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஏழில் செவ்வாய் உள்ள முப்பத்தொரு வயதுப் பெண்ணுக்கு மணமகன் தேவை. பணம் உட்பட சுமாரானசீதனம் கொடுக்கப்படும். விளம்பர இல. 10550 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10550

பெல்ஸ், ரவுசர், சேட்ஸ், சோட்ஸ் வெட்டி திறமாக தைக்கத்தெரிந்த ரெயிலர் உடன் தேவை. ஜெகபதி காம்ரெக்ஸ் அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய். 10576

கற்பூரத் தொழிற்சாலைக்கு வேலை செய்ய பெண்கள் உடன் தேவை. நேரில் வரவும். S N. குமரேசன் 131, அரசடி றோட், கந்தர்மடம். (சந்தி) 10582

தனியார் கல்வி நிலையத்திற்கு உதவி நிர்வாகியும், இலிகிதரும் (பெண்) தேவைப்படுகின்றனர். தகைமைச் சான்றிதளுடன் நேரில் 19-12-83 மு. ப. 9 மணிக்கு வரவும் MODERN COMMERCE கடற்கரை வீதி, பருத்தித்துறை. 10594

கொக்குவிலில் உள்ள எமது சைக்கிள் டயர், ரியூப் தொழிற்சாலைக்கு ஆண் தொழில் பயிலுநர்கள் (Apprentice) தேவை. விண்ணப்பிக்கவும். நோர்தேண் இன்டஸ்றீஸ், 112, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10591

## வகுப்பு

Pianoவும், Accordianனும் சனி, ஞாயிறு உட்பட திருமதி தோமஸ், குதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, கில்லாலை. (மகளிர் மட்டும்). 8914

G. S. Q. (Bio); G. S. Q (Physical and Maths) B sc (Bio); B sc (Physical and Maths) Montessori Diploma Teachers Training Course [பாலர் ஆசிரியர் பயிற்சி வகுப்பு] Home Science Diploma [மனையியல் பயிற்சி வகுப்பு] இக்கல்லூரியில் விஞ்ஞான செய்முறைகள் பட்டதாரிப் படிப்புக்கேற்ற முறையில் விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டுள்ளது. கல்வித்திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தனியார் கல்லூரி 7-1-84ல் ஆரம்பமாகின்றன 30-2-83க்கு முன் பதிவு செய்து கொள்ளவும். விபரத்துக்கு: அதிபர், உயர் கலைக்கல்லூரி, 3, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 10572

## கிணற்றுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

72 வயது வயோதிப மாது தண்ணீர் அள்ளும்போது கிணற்றுக்குப் பலியானார்.

## காணவில்லை

நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆர். வி ஜி. மருந்துக்கடைக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த சைக்கிளும் அதில் இருந்த முக்கிய தஸ்தாவேஜுக்கள் அடங்கிய பையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அல்லது தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். சகோ. பாலகிருஷ்ணன், பண்ணை மாணவர் இல்லம், யாழ்ப்பாணம். 10592

## சேவை

யாழ்நகர் வீடியோ ரசிகர்களுக்காகப் புதிய தமிழ்ப் படங்கள் வெளிவந்துள்ளன உங்களை அங்கத்தவராக்கிக் கொள்ளுங்கள். சிற்றிவீடியோ கிளப், 135 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10593

எமது ஸ்ரூடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர்பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும். Processing ரூபா 30/-, P. C. Printing ரூபா 6/50. கொழும்பு ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். 10509

## குத்தகைக்கு

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் ஸ்ரேசனுக்குப் பின்னால் மில்போட அல்லது கைத்தொழிலுக்கேற்ற 6 பரப்புக்காணி குத்தகைக்குண்டு. தொடர்பு; மல்ரி சேவிசஸ், 37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்கடன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 10598

## வாடகைக்கு

கே. கே, எஸ். வீதி, கி. எஸ். கே. சந்திக்கருகில் தொலைபேசி மற்றும் சகல வசதிகளுடன் எந்தவித வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக்கூடியதான கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ் 37(351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 10599

## FOR SALE

Ford Escort 8 sri six thousand series in immculate condition. Contact - Manager, Pedro Exports Limited, 151, Kasturiar Road, Jaffna. Phone: 24297. (10562)

யாழ்ப்பாணம்
பல நோக்குக
கூட்டுறவுச் சங்கம்
(வரைவுள்ளது)
**நவீன சந்தை**
**Supper Market**
**Drive-in Market**
கடைகளுக்கான
விண்ணப்பம் கோரல்

யாழ், கே. கே. எஸ் வீதியிலுள்ள கூட்டுறவுப்பணிமனையின் தொடராக கட்டப்படவுள்ள நவீன சந்தைக் கடைகளுக்கு கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கான முடிவு திகதி 15 - 1 - 84 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்

பதில் பொதுமுகாமையாளர்
10581

## 8-ஆவது வருட நினைவஞ்சலி



விநாயகம் மகன்
விநாசித்தம்பி
(பரந்தன்
நாகபூஷணிஅம்மாள்
கோவில்
தர்மகர்த்தா)

மலர்வு: 19-11-1897

உதிர்வு: 15-12-1975

அன்பாலும் பண்பாலும் அறவழியாலும் உயர்ந்து அழியாவாழ்விற்குச் சென்றுவிட்ட அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து எட்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நினைவை விட்டு அகலாது, உங்கள் ஆத்மா சாந்தியடைய இன்று 17-12-1983 சனிக்கிழமை நாகபூசணிஅம்மாள் ஆலயத்தில் விசேட அபிஷேகம் அன்னதானம் நடைபெற பிரார்த்திக்கின்றோம்.

மகன் அப்புத்துரை,
மருமகள் பூமணி,
பேரன், பேத்திமார்கள்.

நாகபூஷணி அம்மாள்
கோவில்,
கோவில் கமம்,
D 5, பரந்தன்.

(10590)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## குகசர்மாவுக்கு பாராட்டு

[மாவிட்டபுரம்]

"இன்றைய நவீன உலகில் பழைமைவாய்ந்த புராணங்களின் அருமை பெருமைகளை நாம் உணராமல் இருக்கிறோம். புராணங்கள் பழைமைவாய்ந்தவையானாலும் மனித வாழ்வுக்கு வேண்டிய சமய நெறியை, நற்பண்பை இன்றும் எமக்குப் போதிக்கின்றன. ஆகவே அவற்றை நாம் போற்றிப் பாதுகாக்கவேண்டும்."

இவ்வாறு தெல்லிப்பழை பழனியாண்டவர் தேவஸ்தானத்தில் புராண விரிவுரையாளர் பௌராணிகர் வ. குகசர்மாவுக்கு நடத்தப்பட்ட பாராட்டு வைபவத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

பிரமஸ்ரீ வை. சதாசிவஐயர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. எஸ். ஏழூர்நாயகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பௌராணிகர் வ. குகசர்மாவுக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பிரதம குரு பிரமஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார்.

[வெ]

## Vacancies

SAUDI ARABIA

INSULATORS
TIN SMITHS
RIGGERS
CAMP BOSSES
COOKS and HELPERS
COMMON WORKERS

Apply before 20/12/83 with copies of experience certificates and passport.

CONSTRUCTION AND DEVELOPMENT Co. LTD:
37, S. de. S. Jayasinghe Mawatha, Nugegoda.
Labour Licence No. 96.
Foreign Employment Divi.
No: FE/6/FEA//96/4376

10570

## நியூ பீகோண் கல்வி நிலையம்

ஸ்ரான்லி றோட், யாழ்நகர்.

**1984 (A. L)**

| | |
|---|---|
| தூய, பிரயோக கணிதம் | A. பத்மநாதன்<br>S. சற்குணராஜ |

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 19-12-83 திங்கள்
நேரம்: [2-30 — 4-30]

[10578]

இன்று மாலை 3-30ற்கு ஆரம்பமாகிறது

**SPECIAL SPOKEN ENGLISH COURES**

(6 மாதம்)

ஆசிரியர்: Mr. கே. எஸ். என். குமரன்

★ அநேக பல்கலைக்கழக மாணவர்களதும், வேலை செய்பவர்களதும், மற்றும் அநேகரது வேண்டுகோளுக்கிணங்கவும் ஆரம்பமாகிறது. நேரசூசிகை: சனி, ஞாயிறு 3-30—5-30 (மாலை)

★ இலவச பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.

விபரங்கட்கு:

**கே. எஸ். என். குமரன்**

402 1/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன்கோவிலடி)

(10609)

★ பங்களாதேஷில் காவலிலுள்ள

# கெரில்லாக்கள், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஜனாதிபதி உத்தரவு!

டாக்கா, டிச. 19
பங்களாதேஷ் பாகிஸ்தானிடமிருந்து சுதந்திரம் பெற்ற 12-வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, பங்களாதேஷில் தேசத் துரோகம் தவிர, ஏனைய குற்றங்களுக்காகக் காவலில் வைக்கப்பட்டுள்ள கெரில்லாக்களையும், அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு அந்நாட்டு ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் பங்களாதேஷ் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களிலும், வன்செயல்களிலும் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டுக் காவலில்வைக்கப்பட்ட 200 பேர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டனர்.

பங்களாதேஷில் மீண்டும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தி, அதன் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாக்கப்போவதாக அந்நாட்டு ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் சுதந்திர தினத்தையொட்டி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷின் சுதந்திரத்திற்காக உழைத்தவர்களின் தியாகங்களை மெச்சுவதாகவும் அவர் அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். [வெ]

## இந்திரா சென்னை விஜயம்

சென்னை, டிச. 16
தென் மாநிலங்களின் இந்திரா காங்கிரஸ்கட்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இம்மகாநாட்டில் திருமதி இந்திராகாந்தி சிறப்புரையாற்றுவார். அவர் இவ்விஜயத்தின் போது சென்னை துறைமுகஅபிவிருத்தி வேலைகளையும் பார்வையிடுவார்.

சென்னை மரீனா கடற்கரையில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்திலும் திருமதி இந்திரா காந்தி உரையாற்றுவார்.

## முகமதலிக்கு தங்கத்தில்சிலை!

சிட்னி, டிச.16
முன்னைநாள் குத்துச்சண்டை வீரர் முகமது அலிக்கு தங்கத்திலான சிலையொன்று அவுஸ்திரேலியாவில் நிறுவப்பட்டுவருகின்றது.

இச்சிலை, 24கரட் தங்கத்தில், 48கிலோ நிறையில் உருவாக்கப்படுகிறது. இதற்கான மொத்தச் செலவினம் ஒரு கோடிரூபாவாகும்.

## அமைதியாக நடந்த ஆர்ப்பாட்டம்

சென்னை டிச.16
தமிழ்நாட்டில்இடம் பெற்ற விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்தின் போது இடம் பெற்ற மறியலின் போது சட்டம், ஒழுங்கைப் பராமரித்து அமைதி காத்த பொதுமக்களுக்கும், எதிர்கட்சிகளுக்கும் முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நன்றி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இப்போராட்டத்தை நடத்திய தி. மு. க. வும் அதன் 14தோழமைக்கட்சிகளும் அமைதியான முறையில் தமக்கு ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும், கட்சித் தொண்டர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளன.

### கருணாநிதி கருத்து

இந்தப் போராட்டம் தொடர்பாக அடுத்த கட்டமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி தி. மு. க. அதன் தோழமைக் கட்சிகளுடன் ஆலோசித்துத் தீர்மானிக்கும் என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

## 2,000 குழந்தைகள் ஆர்ப்பாட்டம்

மணிலா, டிச.16
பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. பேர்டினன்ட் மார்க்கோஸைப் பதவி விலகும்படிகோரி 2,000 குழந்தைகள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தி, அணிவகுத்துச் சென்றன.

இவர்களில் அரசியல் கைதிகளின் குழந்தைகளும், செல்வந்தர்களின் குழந்தைகளும் அடங்கியிருந்தனர் (வெ)

## டென்மார்க்கில் பொதுத் தேர்தல்

லண்டன் டிச.16
டென்மார்க் அரசாங்கத்தின் சிக்கன வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தால் நிராகரிக்கப் பட்டதையடுத்து அரசு எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ம் திகதி அங்கு பொதுத் தேர்தலை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

## திரிப்போலியில் கடும் யுத்தம்: 20 பேர் பலி!

பெய்ரூட், டிச. 16
திரிப்போலியில்பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யஸீர் அரபாத்தின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்குமிடையே நேற்றுக் கடும் யுத்தம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இவ்யுத்தத்தின் போது பீரங்கி, ராக்கெட் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த யுத்தத்தில் 20 பேர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது. [வெ]

## "சுதந்திர நாடுகளில் வெளியார் தலையீடுகள் நிறுத்தப்படவேண்டும்"

### இந்திய ஜனாதிபதி கருத்து

லண்டன், டிச. 16
"இந்தியாவும் செக்கோஸ்லாவாக்கியாவும் உலக அமைதிக்காகப் பாடுபடுவதுடன், அணுவாயுதப் போரின் அபாயத்தை நீக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்".

இவ்வாறு இந்திய ஜனாதிபதி திரு. ஸெயில்சிங் செக்கோஸ்லாவாக்கியாவில் அந்நாட்டுத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார்.


சர்வதேசப் பொருளாதார உறவுகள் திருத்தியமைக்கப்படவேண்டுமென்றும், சுதந்திர நாடுகளில் வெளியார் தலையீடுகள் நிறுத்தப்படவேண்டுமென்றும் திரு. ஸெயில்சிங் கூறினார்.

அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியா, ஏகாதிபத்தியத்திற்கும், இனவெறிக்கும் எதிராக நடத்தும் போராட்டத்திற்கு செக்கோஸ்லாவாக்கியா நாட்டுத் தலைவர்கள் இப்பேச்சுவார்த்தையின்போது பாராட்டுத் தெரிவித்தனர். [வெ]


X'mas New Year Offers
HOTEL GNANAMS
A Taste with a difference
A Really Good Taste !
Enjoy
★ Savoury Rice or Noodles
Chop - Suey Noodles or Rice
Mixed Grill
Chef's Special
Any Item 40/- Only.
★ குளிர் ஊட்டப்பட்ட அறைகள்
★ விசாலமான மண்டபவசதிகள்
இவை அனைத்தையும் அமைதியான சூழ்நிலையில் வழங்குவது ஹோட்டல் ஞானம்ஸ்.
For more information Contact:
Manager
Tele: 22082



பவர்ஸ்
வீட்டுத் தோட்ட உரவகைகள்




தேவையான விசேட உரத்தின்
இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.
இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. இச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னாசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. ரோசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – "விசேடம்"
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.
MASTERS ABC 2/83

### மணிவாக்கு

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வதுறைவது அறிவு

— குறள்

# நமது நோக்கு

## பண்பாட்டுச் சீரழிவு

மனிதர்கள் இன்றைய நாகரிக உலகின் தன்மைக்கேற்ப ஒன்றுடக்குழுமியும், இணைந்தும் பிணைந்தும் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளமை விசித்திரமன்று. ஆனால் இந்த கெடுபிடியான நிலைமையிலும்கூட தங்கள் பாரம்பரிய பண்பாடுகளைக் கைவிடாமல் இருக்கும் சூழ்நிலைகளுக்கேற்ப சிறு சிறுமாற்றங்களைச் செய்து கொண்டாகிலும் பின்பற்றி வருவதால்தான் அவர்கள் ஓரினத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு பண்பாட்டைச்சார்ந்தவர்கள் என்ற வகையில் இனங்காணப்படுகின்றனர்.

இந்தப்பண்பாட்டின் ஒரு முனை அவர்கள் பேசும், மொழியாகும். எனவே மொழியை மறந்து போகிறவன் தன் இனத்தின் சாயலையும் படிப்படியாக இழந்து போகிறான் என்பதில் சந்தேகமில்லை

நமது முன்னோர் தம் சிறார்களைத் தமது பாரம்பரிய சூழ்நிலைகளிலேயே வளர்த்தார்கள். அந்த வகையிலேயே அவர்களின் கல்வியும் அமைந்தது. அதனால் பாரம்பரியமும் பண்பாடும்அதனோடு ஒட்டியமரபுகளும் பேணப்பட்டு வந்தன.

ஆனால் இடையில் அந்நியர் ஆட்சியின் கீழ் பல காலம் நாம் அடிமைப்பட்டுக்கிடந்தமையால் எமது பழக்கவழக்கங்களும், பாரம்பரிய மரபுகளும் படிப்படியாக மாறலாயின. இது, அந்நிய கல்வி முறையால் பெரிதும் ஊக்கம் பெற்றது.

இதை நன்கு உணர்ந்த நம் பிற்கால பெரியோர் பலர் இந்தப் பண்பாட்டுச் சீரழிவைத்தடுக்கத் தம்மாலியன்றளவு முயற்சி எடுத்தனர்.

அங்கே தமிழ் நாட்டில் ராஜாசேர் அண்ணாமலை செட்டியார் தமிழ் பண்பாடுகளுக்கு முதன்மை கொடுக்கும் பெரும் கல்வி நிலையங்களை உருவாக்கியது போல் இங்கே சேர். பொன் ராமநாதன் போன்றோர் இந்த அரும்பணியில் முதன்மைபெற்றனர்.

ஆனாலும் இன்றைய நிலை என்ன......?

இதைப்பற்றி சிந்திப்பவர்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றபோதிலும் ஒரு சிலராவது 'உரத்து' சிந்திக்க தலைப்பட்டிருப்பது ஆறுதல் தருவதாகும்.

அண்மையில் மருதனாமடம் இராமநாதன்கல்லூரி நிறுவுனர் நினைவுநாளும் பரிசளிப்புவிழாவும் நடந்தபோது அதில் கலந்து கொண்டு பேருரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா இந்நிலைமைபற்றி மிகவும் அங்கலாய்ப்புடன் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

நமது சமூகத்தின் இன்றைய நிலைபற்றியும், எதிர்காலம்பற்றியும் கவலை கொள்ளும் அறிஞர்கள், அரசியல்வாதிகள், கலைஞர்களை மட்டுமல்ல; எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் நமது துடிப்புமிக்க இளைஞர்கள், இளம் பெண்களையும்கூடப் பேராசிரியர் இந்திரபாலாவின் கருத்துக்கள் சிந்திக்க வைக்கவேண்டும்.

பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் படிப்படியாக இழந்தபின் வெறும் மண்ணைமட்டும் வைத்துக்கொண்டு என்ன செய்யப் போகிறோம்?

''கண் கெட்டபின் சூரிய நமஸ்காரமா?'' என்று பாரதியார் பாடியது இந்த நிலைமைக்கும் பொருந்துவதே.

''கல்வித்துறையில் பெரும் ஆபத்தை நாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றோம். பாரம்பரியங்கள் பண்பாடுகள் என்பனவற்றை மறந்து சான்றிதழ் பெறும் நோக்குடன் மட்டுமே மாணவர்கள் கல்வியைத் தொடருகிறார்கள். இந்த நிலைக்கு முற்றுப் புள்ளிவைப்பது இன்றைய நிலையில் அவசியம் என்பதைச் சகலரும் உணரவேண்டும்'' எனக் கலாநிதி இந்திரபாலா ஊதியுள்ள அபாயச் சங்கு செவிடன் காதில் ஊதியதாகப் போய்விடாமல் சமூகத்திற்குப் பயன் படவேண்டும்.

சாதி, சமயங்களின் பேரால் நடைபெறும் அநீதிகளையும், சீதனக் கொடுமை போன்ற நடைமுறைகளையும் பாரம்பரியத்தின் பேரால் நீடிக்கவிடுவது இன்றைய சமூகத்திற்கு இழுக்குத் தருவதாகும் ஆனால், நம்மை இன்னார் என்று இனம்காட்டும உன்னதமான பண்புகளை இழந்து விடலாகாது.

படமாளிகைகளில் பெண்கள் ஒருபுறமும் ஆண்கள் ஒருபுறமும் அமர்ந்து படம் பார்ப்பதும்கூட நமது பாரம்பரியமாக வந்துள்ள பழக்க வழக்கத்தின் அம்சமே நாகரிகத்தின் பேரால் இதைப் பரிகசிப்பது பேதமை. பாராளுமன்றத்தில் இது பற்றி ஒரு சிங்கள உறுப்பினரே எடுத்துக்கூறி விளக்கியுள்ளது கவனத்திற்குரியது

எதிர்கால சந்ததியினர் மத்தியில் நமது பெருமைக்குரிய பாரம்பரிய பண்பாடுகள் நிலைக்கவும், அவைகளை அவர்கள் தொடர்ந்து பேணவும்வேண்டுமானால் சிறு வயதிலிருந்தே அவை அவர்களுக்குப் போதிக்க படவேண்டும் அதற்கு நம் கல்விக்கூடங்களே அடித்தளங்களாகும்.

நம் பண்பாட்டின் பின்னணியில் கல்வித் திட்டங்களை மாற்றியமைக்கவேண்டும் என்று கலாநிதி இந்திரபாலா வலியுறுத்துவது இன்றைய சீரழிவு நிலைக்குத் தகுந்த மாற்று மருந்தாக அமையுமென்று கருதலாம்.

### திருவெம்பாவை உற்சவம்
(பண்டத்தரிப்பு)

காரைநகர் வலந்தை அருள்மிகு வைரவர் ஆலயத்தில் திருவெம்பாவை உற்சவம் கடந்த 12ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது இறுதித் தினத்தன்று வைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

# வாழ்வா? அணுகுண்டால் அழிவா?

[வல்வையூர் சி. பொன்னையா எழுதிய வாழ்வா அணுகுண்டால் அழிவா? என்ற நூல் குறித்து இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளகருத்துக்களை இங்கே தருகிறோம் ]

மகா மேதையான ஐன்ஸ்ரீனை முக்கிய கதாபாத்திரமாகக்கொண்டு உதயமானது 'வாழ்வா அல்லது அணுக்குண்டால் அழிவா' என்னும் அருமந்த நூல்.

இந்நூல் நாடக நடையில் அமைந்தது நடிக்கவும், திரைப்படம் செய்யவும் வாய்ப்பானது.

குறிப்பிட்ட நூலில் மற்றொரு முக்கிய பாத்திரம், றுத்போட்பிரபு;

மெண்ற முறையீடு ஜவஹர்லால்நேருவுக்குச் சமர்ப்பித்த துண்டு

விஞ்ஞானிகள், நேருவுக்கு, அழிவுகள் பற்றி முறையீடு செய்ய விஞ்ஞானவிளைவுகளைப் பயன்படுத்திக்கொண்டு. தலைநிமிர்ந்தான் ஒரு துரியோதன மகாராஜா: அவன் தான், ஹைசருக்குப் பின்வந்த பிரசித்திபெற்ற ஹிட்லர் முசோலினியும், ஜப்பானும் ஹிட்லருக்குப் பக்கபலமாயினர். ஐரோப்பாவையும் அயலிடங்களையும் தன்கீழ்க்கொண்டுவர ஹிட்லர் முனைந்தான்: அணிவகுப்புக்கள் நடந்தன: யூதர்களை நவீன யாகாக்கினியில் ஆகுதி செய்தான்: யூதராகிய

துக்கும் இழுக்காம்; என்றிவ்வாறு முருகப்பெருமான் போர் முறையை வலியுறுத்தியருளுவதாயும்,

முற்றுகின்றது குறிப்பிட்ட இக்கட்டுரை நூல்.

அணுசக்திகளின் தீயதோற்றவுகளை அடக்கம் செய்வதெப்படி என்று சிந்திக்கவும் வைக்கின்றது இந்நூல்.

அணுக்குண்டுப் போர் முறையை முறியடிப்பதற்கு சனசக்திதான் வழியென்று, நூலாசிரியர் காட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதும் வேண்டப்படுவது இந்த விழிப்புணர்ச்சியை ஒவ்வொரு தேசத்து மக்களும் பெற்றிருப்பது மிகமிக அவசியம்.

இதன் ஆசிரியர் அத்துவக்காத்து திரு. பொன்னையா அவர்கள். நானும் அவர்களும் ஒருவரோடொருவர் உசாவு

பிரபு, அணுவாராய்ச்சித் துறையில் ஐன்ஸ்ரீனோடு ஒப்பிடத்தக்கவர் இருவரும் உணர்ச்சியால் ஒன்றுபட்டவர்கள்; ஒருவரையொருவர் மதித்து வாழ்ந்தவர்கள்

அவர்களைச் சந்திக்கச்செய்து அளவளாவ வைத்துக் கற்பனை செய்வதை இலக்கிய உலகம் ஏற்றுக்கொள்ளும்.

''புணர்ச்சி பழகுதல்
வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்''.

இருவரும் அணுவாராய்ச்சி வாழ்க்கைக்கு நலம் பயக்குமென்றே நம்பினர். அந்த நம்பிக்கையோடேயே பிரபு மறைந்தனர்; அணுசக்தியின் கொடூர கோலாகலத்தை அவர் அறியார்; ஐன்ஸ்ரீனினும் பார்க்க வயசு கூடியவர் அவர். பிரபு போய்விட்டார்; ஐன்ஸ்ரீன் அணு சக்தியின் கொடூர கோலாகலத்தைக் கண்டு கண்ணீருகுக்க வைத்துப் போய்விட்டார். ஐன்ஸ்ரீன் அப்படி ஒரு நிலை வருமென்று காத்திருக்கவில்லை. தம்மாராய்ச்சிகளில் ஆனந்தமுற்றிருந்தார்

இந்நிலையில் ஜெர்மன் சக்கரவர்த்தியாகிய ஹைசர், ஐன்ஸ்ரீனை அழைத்து விஞ்ஞானிகள் மத்தியில் பேருபசாரம் செய்து, விஞ்ஞான பீடத்தின் தலைமைபதவியையும் நல்கினர்.

ஐன்ஸ்ரீன் அணுசக்தியின் அருமைபெருமை பற்றியும், வாழ்க்கைக்குப் பயன்படுத்தல் பற்றியும் உரைநிகழ்த்தினார். அப்பொழுது விஞ்ஞானி ஒருவன் எழுந்து பகைவர்களைத் தீர்த்துக்கட்டவும் இது உதவும் என்ற முறையில் மகிழ்ச்சி தெரிவித்தான் ஐன்ஸ்ரீன் திகைத்தார்; விஞ்ஞானசபைத் தலைவர் மனம் மாறுபட்டது; என்ற சம்பவம். நன்மையை விளக்க எழுந்த கற்பனையாம் எனக்கொள்க

ஒரு சமயம் ஐன்ஸ்ரீன் உட்பட 180 விஞ்ஞான மேதைகள் கையெழுத்திட்டு, அணுசக்தி உலகுக்குக் கேடு விளையாமல் பரிகாரங் காண வேண்டு

ஐன்ஸ்ரீன் ஜெர்மனியைத் துறந்தார்; ஹிட்லர் தான் மூட்டிய அக்கினியில் தானும் மடிந்தான்; முசோலினியும் மாண்டான்; சகாக்கள் மாண்டும், யப்பானின் தலைவெடுப்பு உக்கிரம் குறையவில்லை; ஹிட்லர் யூதரைப் பொரியல் செய்தது போலவே, யப்பானும் ஆயிரக்கணக்கானவர்களைச் சித்திரவதை செய்தது; அமெரிக்காவுக்கு யப்பானில் வெறுப்பு; அநியாயமான சித்திரவதைகளுக்கு மனம்நொந்து வந்த வெறுப்பன்று அந்த அமெரிக்க வெறுப்பு- யப்பான் கடலைத் தன் ஆதிக்கத்தில் கொண்டுவர எத்தனித்ததால் வந்தவெறுப்பு- அமெரிக்கக் கப்பல்களைப் பாதாளத்துக்கு அனுப்பி வந்ததனால் வந்தவெறுப்பு அந்தவெறுப்பு

அந்தவெறுப்பால் அமெரிக்கா அணுசக்தியை உபயோகித்த அக்கிரமத்தை இக்கட்டுரை நூலில்உரிய பக்கங்களிற் காணலாம் அதை நினைத்தால் எந்த நெஞ்சும் எரிந்துவிடும். யப்பானில் மூண்ட நெருப்புச் சுவாலையை ஆசீர்வதிக்கும் முகமாக சேர்ச்சில் முதலிய குருக்கள்மார் புஷ்பாஞ்சலி செய்து அமெரிக்காவுக்குத் தமது திருக்கரங்களை நீட்டியதுண்டு இனிப் பேசுவதென்னே? கொடூரம் தலைசுகு விஞ்சியது

வன்செயலை வன்செயலால் அழிக்க முயல்வது, மேலும் கொடுமையை வளர்ப்பதாம் என்று கூறித் தமது சத்தியம் அஹிம்சை என்ற சிந்தனைகளை உபதேசித்தார் மகாத்மா.

மகாத்மாவின் ஆத்மீக போதனை, யோகியாகிய உபாசகர் ஒருவர் மூலம் முருகனை வேண்டுதலையும்.

போர் நிமுமிடத்து எந்தக் கட்சியினரும் விடும்படைகள், நிரபராதிகளை, ஏழை உயிர்களை, தீங்கிலே சேராதிருக்கும் வேண்டு ; தவறின் யுத்ததருமம் செய்யும் மனிதப் பண்பாட்டுக்கும் வீரத்

தல் உரிமைப்பாடுடையோம்.

விஞ்ஞானிகள் இக்கட்டுரை நூலின் முடிவை ஆதரித்து, ஓருயிருக்குந் தீங்கு விளையாத வகையில்வழிகாண்பார்களாக. அறிவுலகம் சிந்தித்து ஆவன புரிவதாக.

இந்நூலாசிரியர் ஆங்கிலப் பட்டதாரியுடன் சட்டத்தரணியாக இருந்து தமது கடமைகளைச் செய்துகொண்டே தமிழார்வம் மிக்கவராயிருப்பவர். இந்த ஆர்வத்தின் பெறுபேறே இந்நூலில் அவரின் வாழ்க்கை விளக்கத்தைக் காட்டும் இந்நூலில் வாழ்வதாக!

### இலவச கண் சிகிச்சை நிலையம்
(மட்டுவில்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்தும் இலவசக் கண்சிகிச்சை நிலையம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சிகிச்சைகளை அளிக்கவுளளது.


பிரபல கண் வைத்திய நிபுணர்கள் சிகிச்சை அளிப்பார்கள். மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. [வெ]

### சி. வை. தா. ஆய்வு நூல் வெளியீடு
(யாழ்ப்பாணம்)

திருமதி பஞ்சேணமணி சண்முகதாஸ் எழுதிய சி. வை. தாமோதரம்பிள்ளை ஓர் ஆய்வு நோக்கு என்ற நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் வெளியீட்டுக் கழக துணைத்தலைவர் திரு. அ.

(8ம் பக்கம் பார்க்க)


சைவ பரிபாலனசபை அகில இலங்கை ரீதியில் நடத்திய சமய பாடப்பரீட்சையில் தங்கப்பதக்கம் பெற்றோர் (1) செல்வி டி ஜெயசிவனி-10ம் வகுப்பு யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, (2) செல்வி பா. சுபாஷினி, 8-ம் வகுப்பு யாழ். இந்துக் மகளிர் கல்லூரி மடம். (3) செல்வி யோ. ஞானமொழி 9-ம் வகுப்பு யாழ் இந்து மகளிர்க் கல்லூரி

# "கடைசிச் சிங்கள இரத்தம் இருக்கும் வரை இனவாதத்தை அனுமதியோம்!"

## சபையில் 'விமலா' சூளுரை

(இ. கந்தசாமி

"இந்த நாட்டில் கடைசி சிங்கள இரத்தம் இருக்கும் வரை இனவாதத்தை அனுமதிக்கமாட்டோம் பிரிவினைக்கும் இடமில்லை" என்று கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திருமதி விமலா கன்னங்கரா கூறினர்.

தனது அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்துக்கு பதிலளித்து பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் "நாட்டில் ஐக்கியத்தை நிலை நாட்டியே தீருவோம்" என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

'குட்டிமணியின் மூன்றுவது மாத நிறைவை அனுஷ்டிக்குமாறு கோரும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டிக்கொண்டிருந்த பயங்கர சூழலில் நான் மட்டக்களப்புக்கு போனேன். போகவேண்டாம் என்று பலர் சொன்ன போதும் துணிவுடன் சென்றேன். அங்கே பெருந்தொகையான மக்கள் என்னை வரவேற்றார்கள்" என்று கூறிய அமைச்சர் அவர்கள் ஜனாதிபதியைத் தாம் ஆதரிப்பதாகவும் அதனைத் தெரிவிக்குமாறும் கூறியதாக தெரிவித்தார். (இ-கு)

## சூசைதாசனின் இடத்துக்கு திசநாயக்கா

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுக் கணக்காய்வுக்குழுத் தலைவராக கண்டி மாவட்ட அமைச்சர் திரு. டபிள்யூ. எம். ரி. பி. திசநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் எம். பி. திரு சூசைதாசனின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-கு)

# அரச பதவி வெற்றிடங்கள்

### ஒப்புநோக்காளர் பதவி

விவசாயத் திணைக்களத்தினால் ஒப்புநோக்காளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு இம்மாதம் 28 ம் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இம் மாதம் 2-ம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும்.

### மாவட்டநீதிபதி தரம் 2, மஜிஸ்திரேட், ஆரம்ப நீதிமன்ற நீதவான் பதவிகள்

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

மேலதிக விபரங்களுக்கு இம் மாதம் 2-ம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும்.

### உதவி நூலகர்

தேசிய அரும்பொருட்காட்சிச் சாலைத் திணைக்களத்தினால் 'உதவி நூலகர் தரம் 2' பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவு: இம்மாதம் 23-ம் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இம் மாதம் 2-ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

### பொதுசனத் தொடர்பு அதிகாரி பதவி

பாராளுமன்ற விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் பொதுசனத்தொடர்பு அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

விண்ணப்ப முடிவு: இம் மாதம் 30-ம் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இம்மாதம் 2-ம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும்.

### உள்நாட்டு வர்த்தகப் பரிசோதகர் பதவி

உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தினால் உள்நாட்டு வர்த்தகப் பரிசோதகர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு; இம் மாதம் 26-ம் திகதியாகும்.

மேலதிக விபரங்களுக்கு இம் மாதம் 2-ம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும் (வெ)


விளம்பரம்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
கொடிகாமம்

பதவி வெற்றிடம்

கணக்காளர் பதவி

சம்பள அளவுத்திட்டம் 104(8)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. விண்ணப்பிப்போர் 28-12-83ம் திகதிக்கு முன்பாக பொது முகாமையாளருக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பம் தமது சொந்தக் கையெழுத்தில் தயாரித்து விண்ணப்பிக்க வேண்டும்.

கணக்காளர்: 104(8)

(1) சம்பளம்:- 500—840 / 20×5-30×8 (படிகள் தவிர)

(2) வயது :- 28-12-83ம் திகதி 23 வயதிற்கு குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்

(3) தகமை :- (அ) கூட்டுறவுப் பணியாளராக 3 வருட அனுபவமுள்ள 9வது சம்பளம் பெறுகின்ற கணக்குப் பதிவாளர்/கணக்கியல் அல்லது எண்பார்வை லிகிதர் பதவி வகிப்பவர்கள்.

அல்லது

6 வருட அனுபவமுள்ள 10வது சம்பளம் பெறுகின்ற கணக்குப் பதிவாளர்/கணக்கியல் அல்லது எண்பார்வை லிகிதர் பதவி வகிப்பவர்கள்.

(ஆ) ஐக்கிய இராச்சிய (U K) நிறுவனத்தால் நடாத்தப்படும் கணக்குப் பதிவாளர் பரீட்சையில் இறுதியாண்டு பரீட்சையில் சித்தியெய்தியவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நிறுவனத்தில் கணக்கியல்/எண்பார்வை பகுதியில் மேற்பார்வை பதவியில் ஆகக்குறைந்தது 2 வருட அனுபவமுள்ளவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

ஐக்கியஇராச்சியநிறுவனத்தால் நடாத்தப்படும் கணக்குப் பதிவாளர் பரீட்சையில் இடைப்பட்ட ஆண்டு (Intermediate) சித்தியெய்தியவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நிறுவனத்தில் கணக்கியல்/எண்பார்வை பகுதியில் ஆகக்குறைந்தது 4 வருட அனுபவமுள்ளவராக இருத்தல்வேண்டும்.

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்தரம்/க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றவராகவும் இதில் கணக்கியல் ஒரு பாடமாகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் ஸ்தாபனத்தில் கணக்கியல்/எண்பார்வை பகுதியில் மேற்பார்வை பதவியில் 4 வருட அனுபவமுள்ளவராயிருத்தல்வேண்டும்.

தலைவர்

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்,
13-12-83 (10600)



யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை தெல்லிப்பளை
உபஅலுவலகம்

ரேட்டுத்தொழிலாளி பதவிக்கான வெற்றிடம்

நிரந்தர பதவி - 2

மேற்படி பதவிக்கு யா. அ. ச. தெல்லிப்பளை உப அலுவலகத்தால் ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபாலில் 03-01-84க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்

வேதனம்: வருடாந்தம் ரூ. 6 600-8 9-7 320ம் சகல படிகளும்

வயது : 28-12 83ல் 18வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

பிறதகைமைகள்:

(1) இலங்கை பிரஜையாக இருத்தல்வேண்டும்
(2) அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்கள் வைத்திருத்தல்வேண்டும்.
3) 3ம் வகுப்பு வரையாவது கல்வித் தகைமைகள் இருத்தல் விரும்பத்தக்கது
(4) கீரிமலைக்கேணி துப்புரவுசெய்தல் உட்பட கடமைகள் செய்யவேண்டுமாதலால் நல்ல தேகாரோக்கியமாயிருத்தல்வேண்டும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

இ. முருகையா
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
யாழ். அபிவிருத்திச்சபை,
உபஅலுவலகம், தெல்லிப்பளை,

யாழ் அபிவிருத்திச்சபை,
உபஅலுவலகம்,
தெல்லிப்பளை,
14-12-1983 (10603)



ஹோம் பிறைன்ஸ் லிமிட்.

உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறைன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24610

2. யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

3. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480

4. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறைன்ஸ் லிமிட். 463, காலி வீதி, கொழும்பு-3 தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ் 157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி, கொழும்பு-11. தொலைபேசி: 3277



கிறிஸ்மஸ் சலுகை!!

எலைற் ரெலிவிஷன்

விலை 2750/00

பூஸ்டர், அன்ரனா, வயர் இலவசம்.

24-12-83 வரை மட்டுமே இச்சலுகை

நியூசிற்றி ரேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். — போன்: 24055

### ஈச்சமோட்டையில்

## களவாக குழாய்நீர்; விநியோகம் துண்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில், களவாக குழாய் நீர் பெறுவது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த வீட்டிற்கான குழாய்நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் பணிப்பைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஈச்சமோட்டை பகுதியில் 'தண்ணீர் மீட்டர்' உள்ள வீட்டிலிருந்து மற்ற இருவீடுகளுக்கு குழாய்கள் பொருத்தி களவாக குழாய்நீர் பெறப்படுவதாக, ஆணையாளருக்கு தகவல் கிடைத்தது.

இதுபற்றி சோதனை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, வேலைப்பகுதியினரை ஆணையாளர் கேட்டிருந்தார். வேலைப்பகுதியினர் நடத்திய சோதனையின் போது ஒரு வீட்டில் மட்டும் களவாக குழாய் நீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டது

இதைத் தொடர்ந்து அந்த வீட்டிற்கு நீர்விநியோகத்தை துண்டிக்குமாறு ஆணையாளர் பணித்திருந்தார். (க)

### ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-02 | 'ஒன் வி கோ' கல்வி நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-15 | இஸ்லாமிய நிகழ்ச்சி |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | ஜப்பான்பற்றிய தகவல் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 7-45 | கலைநிகழ்ச்சி (சிங்களம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | நாடக நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-00 | இசை நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 10-50 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## எம். பி. க்களின் 'அலவன்ஸ்' அதிகரிப்பு குறித்து ஆய்வர்!

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் 'அலவன்சை' அதிகரிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக சர்வகட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற அமர்வுகளுக்கும், எரிபொருளுக்கும் தற்போது வழங்கப்படும் அலவன்சை அதிகரிக்குமாறு கோரப்பட்டதைத் தொடர்ந்து கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இத்தகவல்களை பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்ற உரைகளை சகல மொழிகளிலும் மொழிபெயர்த்து 'ஹன்சாட்டில்' வெளியிட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட யோசனை குறித்து ஆராயப்பட்ட போது இதுகுறித்து அந்த நேரத்தில் சபாநாயகர் முடிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. (இ-கு)




## "காரியாலய ஊழியர்கள் அனைவரும் ஒரு குடும்பம்"

(கல்வியங்காடு)

"காரியாலயங்களில் கடமை புரிந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனோபாவத்துடன் தத்தம்சேவை களையாற்றவேண்டும். இதனால் வேலைப்பளுக்கள் குறைந்து மக்களுக்கும் நல்ல சேவைசெய்ய முடியும்."

இவ்வாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை, யாழ். கல்வித்திணைக்களத்தில் கடமைபுரிந்து இடமாற்றம்பெற்று வேறிடங்கள் சென்ற உத்தியோகத்தர்களுக்கும், ஓய்வூதியம் பெற்றவர்களுக்குமாக கல்வித்திணைக்கள நலன்புரிக்கழகம் நடாத்திய பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ச. சந்திரராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்வித்திணைக்கள நலன்புரிக்கழகம் இந்தப் பதின்மூன்று பேர்களுக்கும் அன்பளிப்புக்களை வழங்கியது. இவர்கள் சார்பாக நன்றிதெரிவித்து திரு. செ. மெற்றூஸ் மெயில், திரு. திரு. ஏ. சிதம்பரப்பிள்ளை ஆகியோர் பேசினர். (கு)

### யாழ். பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியர்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி எஸ் சுசீந்திரராசா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், களனிப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியவற்றில் மொழியியல் விரிவுரையாளராகப்பணியாற்றிய இவர் இலங்கை பேச்சுத் தமிழ், இந்தியப் பேச்சுத்தமிழ், சிங்களத்திற்கும் தமிழிற்கும் மொழியமைப்பில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், தமிழ்மொழியை தாய் மொழியாகக்கற்பித்தல், தமிழ்

(7-ம் பக்கம் பார்க்க)



**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**எங்க தங்க ராஜா**

**சாந்தி** (யாழ் நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்பால் இனிய இசையால்...
சிறந்த கதையால் உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**IRON MAN**
ACTION THIRILL

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

**Rajah** JAFFNA
Daily 10-30 2-00 4-30
6-30 and 8-30
Jackie Chan in His First American Spectacular
**BATTLE CREEK BRAWL**
(Color Scope)
An adventures Action Packed Karate Film which you would have ever seen before
குறிப்பிட்ட தினங்களுக்கு மட்டும்

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஓவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 2-ம்திகதி
சனிக்கிழமை
17-12-83

மேடம்; ஆசை அலைகள் மோதும், வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும், ஆணவப்போக்கினால் பிறரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், மனவடக்கம் நன்று.

இடபம்: பணவிடயத்தில் திருப்திகாணப்படும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாகக் காணப்படும், பெரியஇடத்துச் சிநேகிதமும் இன்றுகிடைக்கும்.

மிதுனம்:- உறவு முறைகளில் பிளவு தென்படும், மனதில் உற்சாகம்குன்றும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடாதிருக்கவும், முன்னெச்சரிக்கை நன்று.

கடகம்; வாகன சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம் வரவிலும் திருப்திகாணப்படும், தாய்வழிமூலம் சிலருக்கு தனலாபமும கிடைக்கலாம், அறவழிகளை மனம் நாடும்.

சிங்கம்:- தெளிந்த மனம் தெய்வசித்தம், தேடியது கிடைக்கும், அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு. மக்களால் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் பிறக்கும்.

கன்னி:- அன்னிய வாசம் அமைதிக்கு உலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் நிதானமாக இருக்கவும். ஆத்திரத்தை அடக்கின் நன்று

துலாம்;- கனிவான நினைவுகளில் மூழ்ப்போவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும், நீண்டநாள் அபிலாசைகள் இன்று நிறைவேறும், உங்களுக்கு உதவ மற்றவர்முன் வருவார்கள்.

விருட்சிகம்:- நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும், வியாபாரிகள் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்வர், பொருள் செலவுமுண்டு. நில், நிதானி. செயல்படு.

தனு:- ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் பிறக்கும், பொதுப்பணிகளில் ஈடுபடுவதன் மூலம் நன்மதிப்பை பெறுவீர், பிதாவழியால் நற்செய்தியுமுண்டு.

மகரம்:- புதியதொழில் மூலம் அதிக லாபம்கிடைக்கும், புத்திரர் செல்வாக்கு பெருகும், பூமியால் முன்னேற்றம் உண்டு. புதுமையில் மனநாட்டம் உண்டாகும்.

கும்பம்;- வணிகத்துறையில் முன்னேற்றமுண்டு நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், உண்மை வழிநின்று உயர்வடைவீர்கள்.

மீனம்:- கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள், விடயங்கள் அனைத்தும் மூடுபனியாகவேயிருக்கும், முதலீட்டுத் தொழில் புரிவோர் மட்டுப்படுத்திக் கொள்வது நல்லது, சிக்கல் நிறைந்த தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## யாழ். பல்கலைக்...

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களுக்கு ஆங்கிலங் கற்பித்தல், சமூக மொழியியல் போன்ற விஷயங்கள் குறித்து ஆராய்ச்சிக்கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். இவர் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் காலஞ்சென்றமயிலிட்டி எஸ். சுவாமிநாதன் அவர்களின் புதல்வராவர்.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
நாகேஷ் - விஜயா
**சர்வர் சுந்தரம்**

**றீகல்** தினசரி
10-30, 2-30, 6-00
கமல் - அம்பிகா
சுஜாதா - சுமன் - நாகேஷ்
**கடல் மீன்கள்**
புதிய பிரதி - கலர்

**ஹரன்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - பாரதி
**உங்கள் விருப்பம்**
விரைவில்
DEATH HUNT

இன்னும் 4 தினங்கள் மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி —K.R விஜயா, மாதவி, சுருளிராஜன், ஸ்ரீபிரியா மற்றும் பலர் திறம்பட நடித்த, வர்ணப் படம்
**சத்திய சுந்தரம்**

அடக்கமற்ற மனிதன் வெளியிடும் பொய் வதந்திகளால் அவன் தனக்கு மட்டுமன்றி, தன் சமுதாயத்துக்கே பெருங்கேட்டினை விளைவிக்கிறான்.
— மகாத்மா காந்தி




நீலந்தோய்க்கும் வேலைச்சிரமம் வேண்டாம்
உங்கள் சீருடைகள் நொடிப்பொழுதில்
மிகுந்த வெண்ணிறமடைவதற்குச் சிறந்த வழி
சிக்கனமான வழி பாவியுங்கள்
பளிச்சிடும் வெண்மைக்கு
**மில்க்வைற் நீல சோப்**
ரூபா 2-50 சதம்.
மேலுறைகளை அனுப்பி புது வருடக் கலண்டர்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
**மில்க்வைற்** யாழ்ப்பாணம்.

## அரிய சந்தர்ப்பம்

★ எலெக்ரிக் வெல்டிங்
★ குழாய் பொருத்தல் (PIPE FITTING)

யாழ். நகரில் முதல் தடவையாக வெளிநாடுகளில் வேலை செய்வதற்கேற்றமுறையில் இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

**ஆரம்பம் 18-12-83**

விபரங்களுக்கு;
**THE SCHOOL OF COMPUTER STUDIES,**
52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
**குறேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

கொலண்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் வெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

**CROSS TRAVEL SERVICES (PTE) LTD.**
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு

## சுங்க ஏலவிற்பனை

இதன்கீழ் விபரிக்கப்பட்டுள்ள பொருட்கள் எதிர்வரும் 21-2-83 புதன்கிழமை காலை 10-00மணிக்கு யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

(1) இந்தியன் சாரங்கள்
(2) குழந்தைகளுக்கான தைக்கப்பட்ட உடைகள்.
(3) சலுசல நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட கால் சட்டை, சேட் துணிகள்.

செ. கணேஸ்
உதவி சுங்க சேகரிப்பாளர்
யாழ். மாவட்ட சுங்க சேகரிப்பாளருக்காக.

10603

மீண்டும்! தொலைக்காட்சியில் **சென்னை** நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன்
ஏரியல் அமைத்துக்கொள்ளவும், மங்கள வைபவங்களை **வீடியோவில் படம்** பிடித்துக்கொள்ளவும்
நாடவேண்டியது

**வீனஸ்** 226/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**நியூ வீனஸ்** 79/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்

# "இயக்கத்தின் பெயரில் கொள்ளை நடந்தது"

(யாழ்ப்பாணம்)

சந்தேக நபர்களான ஸ்ரீதரன், உதயணன் ஆகிய இருவரும் பாரதூரமான குற்றம் செய்த காரணத்தினால் 90 நாளைக்கு பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை செய்ய, வட பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ராஜலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றையும் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன் சமர்ப்பித்துள்ளதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அக்டோபர் 19-ம் திகதி இரவு 7-15க்கு காரைநகரைச் சேர்ந்த கே. இ. ஜெகசோதி என்பவர் தனது 80 ஸ்ரீ 6109 இலக்க மோட்டார் சைக்கிளில் தமது மகன், மகளுடன் இருபாலைக்கு சென்று கொண்டிருந்தபொழுது சுன்னாகம் நெற் சந்தைப்படுத்தும் சபை முன்பாக இனம் தெரியாத நால்வர் துப்பாக்கி முனையில் இயக்கத்தின் பெயரைச்சொல்லி மோட்டார் சைக்கிளைக் கடத்திச் சென்றுள்ளதாக சுன்னாகம் பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது. தகவல் கிடைத்ததும் விசாரணைக்குச் சென்ற பொலிசார் இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் சைக்கிள் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகியிருந்ததைக் கண்டுபிடித்ததுடன் நபர் ஒருவரையும் கைது செய்தனராம்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஸ்ரீதரன் [23 வயது] என்பவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவராவார். இவரிடமிருந்து போலித் துப்பாக்கி ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனராம். மோட்டார் சைக்கிளும் சந்தேக நபரும் பிடிபட்டபொழுது, மற்ற இருவரும் தப்பி ஓடிவிட்டனராம்.

கைது செய்யப்பட்டவரின் விசாரணையைத் தொடர்ந்து மற்றொரு சந்தேக நபரான ஊரெழுவைச் சேர்ந்த உதயணன் (வயது 22) என்பவரை சுன்னாகம் பொலிசார் கைது செய்துள்ளனர். மற்ற இருவருமான மயிலங்காட்டைச் சேர்ந்த ராஜா என்பவரையும், மல்லாகத்தைச் சேர்ந்த விஜயன் என்பவரும் தலைமறைவாகிவிட்டனராம்.

கைது செய்யப்பட்ட உதயணன் என்பவரின் வீட்டில் சோதனையிட்ட பொலிசார் முகமூடிகள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஸ்ரீதரன் ராஜா ஆகிய இருவரும் தலைமறைவாக இருக்கும் விஜயன் என்பவரும் சேர்ந்து திருநெல்வேலிச் சந்தியில் வைத்துத் துப்பாக்கிமுனையில் வான் ஒன்றைக் கடத்தி வந்து, மல்லாகம் எரிபொருள் நிலையத்தில் 856 ரூபா கொள்ளை அடித்ததாகவும் அதே வானில் சென்று அளவெட்டி ப. நோ. கூ. சங்கத்துக் கிளையில் பெற்றோல் இல்லாமல் போனதும் அங்கு நிறுத்திவிட்டுச் சங்க காவலாளிகளான ஈ. செல்லையா, ஈ. சுப்பிரமணியம் ஆகிய இருவரையும் பயமுறுத்தி லொறியைக் கேட்டபொழுது அதற்கு அவர்கள் மறுக்கவே அவர்களின் இரு சைக்கிள்களையும் கடத்திச் சென்றதாகவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

பொலிசார் ஒரு சைக்கிளை உருப்படியாகவும், மற்றதை உதிரிப்பாகங்களாகவும் மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கைதுசெய்யப்பட்ட இருவரும் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுவருவதாகவும், இயக்கங்களுக்கும் இவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (மா)

## சி. வை. தா...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கவிஞர் இ. முருகையன், திரு த சண்முகசுந்தரம், நா. சுப்பிரமணியம், ஆ சிவநேசச்செல்வன் ஆகியோர் உரையாற்றுவார்கள் நூலாசிரியர் சார்பில் கலாநிதி அ. சண்முகதாஸ் பதிலுரை வழங்குவார். (கு)

## வயோதிப...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாதன் உட்பட பலர் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும், பின்னர் ஜன்னலைத் திறந்தபொழுது அவர் இறந்த நிலையில் கிடந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

இக்கொலை சம்பந்தமாக யாழ் பொலிசாருக்குப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் முத்துத்தம்பி தலைமையில் சென்ற பொலிசார் சடலத்தைப் பார்வையிட்டு யாள் ஆஸ்பத்திரிப் பிரேத அறைக்கு விசாரணைக்காக எடுத்துச்சென்றனர்.

யாழ் சட்ட வைத்திய அதிகாரி எஸ் சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை செய்தார். இறந்தவரின் கணவரும் இரு புதல்வர்களும் சடலத்தை அடையாளம் காட்டினர். பண்டைதீவு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அன்ரனி பொன்னுண்டோ மரண விசாரணை நடத்தினார். யாழ். பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த கான்ஸ்டபிள் எம். பி நமசிவாயம் சாட்சிகளை ஆஜர் செய்தார். சட்டவைத்திய அதிகாரி கழுத்து நெரிக்கப்பட்டு மரணமானார் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி கொலை எனத் தீர்ப்பளித்து பொலிசாரைத் தொடர்ந்து விசாரணை செய்யுமாறு பணித்தார். (மா)

### பிடிபட்டார்

[நல்லூர்]

யாழ்ப்பாண நீதிமன்ற வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணிஒருவரின் காரின் உதிரிப்பாகம் ஒன்றைத் திருடிய சந்தேகநபரை யாழ்ப்பாண நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் சார்ஜண்ட் எஸ். மாணிக்கவாசகர் கைது செய்தார்.

யாழ்ப்பாண மேலதிக நீதவான் எஸ். வரதராசா முன்னிலையில் இந்த சந்தேகநபரான தம்பித்துரை ஆஜர் செய்யப்பட்ட போது ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார் மேல் விசாரணை மார்ச் 5-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (கு)

## மரண அறிவித்தல்

### வைத்திய கலாநிதி
### பொ. அம்பலவாணர்

சுதுமலை தெற்கைச் சேர்ந்த வைத்தியகலாநிதி பொன்னம்பலம் அம்பலவாணர் காலமானார். இவர் காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் அன்புக்கணவரும், டாக்டர். பொன்னம்பலம் (அவுஸ்திரேலியா) திருமதி இராசாத்தி திருநாவுக்கரசு (நைஜீரியா), ஸ்ரீதரன் ஆசிரியர், காலஞ்சென்ற டாக்டர் கெங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு (நைஜீரியா), மனோகரி (அவுஸ்திரேலியா), இந்திராணி, சிவஜெயந்தியின் மாமனுமாவார். ஈமைக்கிரியைகள் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை, காலை 11 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

(10596)

## மரண அறிவித்தல்

### A. K. ஆறுமுகம்

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் திரு. A. K. ஆறுமுகம் காலமானார். இவர் சுகிர்தரட்னத்தின் அன்புக் கணவரும் மனோன்மணி செல்வநாயகம், சரஸ்வதி ரெஜினோல்ட் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயராணி (ஆசிரியை R. C. T. M. திருநெல்வேலி), முத்துராணி, பத்மராணி இளைப்பாறிய ஆசிரியை கொழும்புத்துறை மகா வித்தியாலயம்), சௌந்தரராஜா (காகித ஆலை, வாழைச்சேனை), காலஞ்சென்ற நவரட்னராஜா, இந்திராணி (ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யோகராணி (முன்னாள் இ. போ. ச. ஊழியர்), தர்மராஜா (நைஜீரியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, சுப்பிரமணியம், விஜயராஜா (கணக்காளர் திணைக்களம்), சரோஜினிதேவி யோகசுந்தரம் (சாம்பமூர்த்தி அன் Co.), பத்மலோஜினி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 4, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளியிலிருந்து, நல்லடக்கத்திற்காக, இன்று 17-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு. பரியோவான் ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

10595

## இப்படியும் நடக்கிறது

அகதிகள் முகாம் ஒன்றில், ஒன்பது வயதுச் சிறுமி முந்நூறு ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால்; 'விற்பனை' விஷயம் அகதிகள் சிலரின் காதுகளுக்கு எட்டவே, அந்தச் சிறுமி அவசரம் அவசரமாக எப்படியோ 'கடத்தி'வரப்பட்டு முகாமில் அதன் பெற்றோரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டுவிட்டது!

இனித்தான் 'கிளைமெக்ஸ்' ஆரம்பிக்கப்போகிறது!

ஒன்பது வயதுச் சிறுமி வந்து சேர்ந்த சில நேரத்தில், நேற்றுக்காலை, அந்தச் சிறுமியின் பதினொருவயது அக்கா மீண்டும் அதே பேர்வழிகளுக்கு விற்பனைசெய்யப்பட்டு விட்டது!

இதில் 'பயங்கரம்' என்னவென்றால்; கிழக்கைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதியொருவரின் உறவினர் ஒருவர்தான் பதினொரு வயதுப் பிள்ளையை பணம் கொடுத்து வாங்கினராம்.

-"ஊடுருவி"

## யாழ். நகரில் இரவு நேரத்தில் தொழிற்சாலைகள் இயங்கினால் மின்சாரம் துண்டிக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் கைத்தொழில் நிறுவனங்களையும் பொறிகளையும் வரியிறுப்பாளர் வெளிச்ச வசதிக்காக மின்சாரத்தைப் பாவிக்கும் உச்சப்பாவனை நேரமான மாலை 5-45 மணிமுதல் இரவு 10 மணிவரை இயக்காது இருக்க வேண்டும்.

யாழ். நகரிலுள்ள கைத்தொழில் நிறுவனங்களுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ வி. கே. சிவஞானம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்கூறப்பட்டிருப்பதாவது: 'இவ்வறிவித்தலை அசட்டை செய்து மின்சார உச்சப்பாவனை நேரத்தில் தங்களது கைத்தொழில் நிறுவனம் இயங்குமாயின் திடீர் சோதனையின் போது தங்களது மின் இணைப்பு எதுவித முன்னறிவித்தலுமின்றி துண்டிக்கப்பட நேரிடும்.

இவ்விடயத்தில் தங்களது ஒத்துழைப்பு மிகவும் வேண்டப்படுகிறது. (க

## கிளிநொச்சி செயலகம் ரூபா 10 லட்சம் ஒதுக்கீடு!

(யாழ்ப்பாணம்)

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கான கட்டிடம் கிளிநொச்சி காணி அலுவலகம் அமைந்திருக்கும் காணியில் கட்டப்படவுள்ளது.

இக்கட்டிடத்துக்கெனமுதல் கட்டமாக 10 லட்சம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இக்கட்டிடம் கட்டப்படுவதற்கு முன்னர் கிளிநொச்சி நெல்சந்தைப் படுத்தும் அலுவலகக் கட்டிடம், நீர்ப்பாசன இலாகா சுற்றுலாவிடுதி, விற்பனைத் திணைக்களக் களஞ்சியக் கட்டிடம் ஆகியவற்றில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் புதிய செயலகம் இயங்கத் தொடங்கும்.

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட விற்பனைத் திணைக்களக் களஞ்சியக் கட்டிடம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியாப் பகுதிகளிலிருந்து விவசாய உற்பத்திப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கென கட்டப்பட்டிருந்தது. புதிய செயலகத்தின் ஒரு பகுதி இயங்குவதற்கு இக்கட்டிடத்தில் சில திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (மா

## யாழ். நகரில் கைலாசபதி முதலாண்டு நினைவு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதியின் முதலாண்டு நினைவுச் சொற்பொழிவு நாளை பிற்பகல் யாழ் வீரசிங்க மண்டபத்தில். தேசிய கலை இலக்கியப் பேரவையினால் நடாத்தப்படவுள்ளது. திரு அ ஜெயரட்ணம் தலைமையில்நடக்கும் இவ்விழாவில், பேராசிரியர்கள் சி. சிவசேகரம், ப. சந்திரசேகரம், திருமதி. சித்திரலேகா மௌனகுரு, திரு கே செந்திவேல், திரு என் ரவீந்திரன், திரு க தணிகாசலம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

போக்கு வரத்து வசதி காரணமாக நிகழ்ச்சி உரிய நேரத்தில் ஆரம்பமாகும்.

## நாளை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கப்பட்ட உப-தபால் நிலையங்களில் கொள்ளைபோன பணத்தை உப-தபால் அதிபர்கள் ஈடுசெய்ய வேண்டுமென்ற சுற்று நிருபத்தை அரசு வாபஸ் பெறவேண்டும் போன்ற தீர்மானங்கள் கூட்டத்தில் வரவுள்ளன.

## காரைநகரில் மணிவாசகர் விழா நாளை ஆரம்பம்

[காரைநகர்]

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில், ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் மணிவாசகர் விழா நாளை ஆரம்பமாகிறது. இவ்விழா மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலங்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389 — 24126.